

# கலைஞரைப் பற்றி கவிஞர் சுரதா



வெளியீடு: உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை
சேலம் மாவட்டம்

# கலைஞரைப் பற்றி
# கவிஞர் சுரதா

உவமைக் கவிஞர்

**சுரதா**

உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை
சேலம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | டிசம்பர் 1988 |
| இரண்டாம் பதிப்பு | : | ஜூன் 1992 |
| மூன்றாம் பதிப்பு | : | டிசம்பர் 1995 |
| நான்காம் பதிப்பு | : | ஜூன் 2000 |
| ஐந்தாம் பதிப்பு | : | ஜூன் 2004 |

© உரிமை ஆசிரியருக்கு

**விலை ரூ. 15.00**

ஒளி அச்சு : என்.ஆர். கிராபிக்ஸ், சென்னை-5.
அச்சிட்டோர் : சேகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-5.

# பதிப்புரை

வாழும் கவிஞர்களில் வரலாற்றை நன்கறிந்த எங்கள் பேரவையின் தலைவர், ஊக்குவிப்புக் கவிஞர்-புதுமைகளைப் போற்றி மகிழ்பவர். அவர் சொல்லேற்று இல்லத்தில் கல்வெட்டு வைத்தோம். எழுத்துக்களை நூல் வடிவில் உலவ விட்டோம். ஆன்றோர்கள் வாழ்ந்தமைக்கு அவர் வாழ்ந்த ஊரிலேயே நினைவுக் கல்வெட்டு வைக்கும் திட்டத்தில் வரும் ஆண்டில் நாமக்கல் கவிஞருக்கு கல்வெட்டு நிறுவிடவும் திட்டமிட்டுள்ளோம். இடையே... தகுதி மிக்கவர்களைத் தகுதியுள்ளவர்கள் பாராட்டுவது தமிழகத்தில் குறைவு. ஆனால் எழுத்துச் சூரியன் கலைஞரை எங்கள் ஆசான் பாராட்டுகிறார்; ஆதாரத்தோடு, அவர் பாராட்டுகிற பாங்கு பாராட்டு என்ற சொல்லுக்கு இலக்கணம் படைக்கின்றது. இப்படித்தான் பாராட்ட வேண்டும் என்றும் வழிகாட்டுகிறது.

உரையை வெளியிட அனுமதித்த கவிஞர் பேருள்ளத்திற்கும், ஒளி அச்சு வடிவமைத்த என்.ஆர். கிராபிக்ஸ், முகப்பு அட்டை ஓவியம் தீட்டிய சென்னை ஓவியர் ஜமால், அச்சிட்ட சென்னை சேகர் ஆப்செட் பிரிண்டர்ஸ் ஆகியோருக்கும் நன்றி.

சிதறிக் கிடக்கும் சிந்தனையாளர்களை ஓரமைப்பில் கொண்டு வரவும், வளரும் கவிஞர்களை வரவேற்று உருவாக்கவும், மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக நடைபோடும் உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை உலகத் தமிழர்களின் தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றி உலகக் கவிஞர்களின் தலைவர் உவமைக் கவிஞர் சுரதாவின் பாராட்டினை நூலாக்கி வெளியிடுவதில் பெருமையும் பெரு மகிழ்ச்சியும் அடைகிறது.

அன்புடன்,

**எழுஞாயிறு**

அமைப்பாளர்,

உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை,

சேலம் மாவட்டம்.

# கலைஞரைப் பற்றி கவிஞர் சுரதா

வடஆற்காடு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் வேலூர் அண்ணா கலையரங்கில், எனது நண்பரும் என்னை விட நான்கு வயது இளையவருமான கலைஞரின் பொது வாழ்வுப் பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் இப்படி எத்தனைத் தலைவர்களுக்கு விழா வெடுக்கப்பட்டுள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது பொது வாழ்வுக்குப் பொன்விழா எடுக்கும் ஒரே தலைவராக கலைஞர்தான் விளங்குகிறார். பொதுவாக அறுபது வயது முடியும்போது மணிவிழாதான் எடுப்பது வழக்கம். கலைஞருக்கு அறுபத்து நான்கு வயது ஆகிறது. அவரது பொது வாழ்வுக்கு பொன் விழா எடுக்கிறார்கள் என்றால், அவர் பதினான்கு வயதில் அரசியலில் ஈடுபட்டுள்ளார். ஓரியக்கத்தில் தட்டுத் தடுமாறாமல் ஐம்பது ஆண்டு காலமாக இருந்து வருகிறார். இப்படிப்பட்ட தமிழனுக்கு விழா எடுப்பது சிறப்பாகும்.

பொதுவாக நான் அண்மைக் காலங்களில் கலந்து கொள்கிற கூட்டங்களில் எல்லாம் நிகழ்ச்சி நடைபெறும்

நாளில் பிறந்த பெருமக்கள் பட்டியலைப் படித்துக் காட்டுவது வழக்கம். இதன் வாயிலாகப் பல்வேறு துறைகளில் நாட்டுக் குழைத்த - நற்புகழ் பெற்ற நல்லோர் பலரை நினைவு கூர முடிகிறது. இந்த 88ஆம் ஆண்டில் 107வது நிகழ்ச்சியாக வேலூரில் கலந்து கொண்டு, 31.10.1988ஆம் நாளாகிய இன்று இதே நாளில் பிறந்த பெருமைக்குரிய பெருமக்கள் சிலரைச் சுட்டிக் காட்டுகிறேன்.

## நாவலாசிரியர்

30.10.1821இல் இரஷ்ய நாவலாசிரியராகிய தஸ்தோவஸ்கி என்பவர் பிறந்திருக்கிறார். எனது நண்பர் கலைஞர் அவர்களும் சுருளிமலை, வெள்ளிக்கிழமை, புதையல், ரோமாபுரிப் பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம் பொன்னார் சங்கர் போன்ற பல்வேறு நாவல்களைப் படைத்து நாடு போற்றும் நாவலாசிரியராக விளங்குகிறார்.

## கவிஞர்


அமெரிக்கக் கவிஞர் எஸ்ரா பவுண்டு பிறந்தது 30.10.1885இல்.

"தளை தட்டும் தொடை தட்டும் எனது பாட்டில்" என்று அடக்கத்தோடு சொன்னாலும்கூட, கவியரங்கத் தலைமை ஏற்கின்றபோது களைகட்டச் செய்யும் ஆற்றல் படைத்த கவிஞராக எனது நண்பர் கலைஞர் அவர்கள் விளங்குகிறார்.

(தலைவர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் கவிஞர் சாஸ்திரி வெங்கட்டராமன், கவிஞர் மு. அருங்குளவன் ஆகியோரும், 30.11.88இல் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை அவர்கள் இல்லத்தில் சந்தித்து உலகத் தமிழ்க் கவிஞர் பேரவைக்கு சிறப்புப் புரவலராக

இருந்திட அமைப்பின் சார்பாகக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, டாக்டர் கலைஞர் அவர்கள் மகிழ்வுடன் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்)

-முரசொலி 1.12.88



**திரைப்படப் பாடலாசிரியர்**

30.10.1887இல் பிறந்த, மதுரை எம்.எஸ். பாலசுந்தரக் கவி என்பவர், திரைப்படப் பாடலாசிரியராகத் திகழ்ந்திருக்கிறார்.

**கலைஞரும் சிறந்த திரைப்படப் பாடலாசிரியர் என்பதற்கு இந்தப் பட்டியல் கட்டியம் கூறும்**

1. ஊருக்கு உழைப்பவன்டி...ஒரு குற்றம் அறியானடி...
   -மந்திரி குமாரி 1950

2. இல்வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்
   -பராசக்தி 1952

3. பூமாலை நீயே... புழுதி மண் மேலே...
   -பராசக்தி 1952

4. புதியதோர் பாதையை வகுப்போம் நாம்
   -நாம் 1953

5. வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
   -நாம் 1953

6. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
   -நாம் 1953

7. மாரி மகமாயி மாரி மகமாயி
   -நாம் 1953

8. சொப்பனத்தில் வந்த கடவுளின் அருளால்
   -நாம் 1953

9. பேசும் யாழே பெண் மானே
   -நாம் 1953 (ராஜா ஜிக்கி பாடுவது)

10. மணமில்லா மலர் நானம்மா
   -நாம் 1953

11. பேசும் யாழே பெண் மானே
   -நாம் 1953 (ஜிக்கி மட்டும் பாடுவது)

12. ஹா ஹா வருவாய் வருவாய்
   -நாம் 1953

13. அம்மையப்பா அருள்புரிவாய்
   -அம்மையப்பன் 1954

14. காதல் புறா காதிலே பேசுவதேனோ
    -அம்மையப்பன் 1954

15. சின்னப் புதுமலரே...சிங்கார அகல் விளக்கே
    -அம்மையப்பன் 1954

16. நீலக் கடல் பாரு பாப்பா
    -அம்மையப்பன் 1954

17. பொது நலம் என்றும் பொது நலம்
    -ரங்கோன் ராதா 1956

18. ஓடையிலே ஒருநாள் எந்தன்
    -ரங்கோன் ராதா 1956

19. ஆயர்பாடி கண்ணா நீ ஆடவாராய் என்னோடு
    -ரங்கோன் ராதா 1956

20. வான் மலர்ச் சோலையிலே
    -ரங்கோன் ராதா 1956

21. தமிழே தேனே கண்ணே தாலேலோ
    -ரங்கோன் ராதா 1956

22. மணிப்புறா! புதுமணிப்புறா!
    -ராஜா ராணி 1956

23. வேலையில்லாத தொல்லை
    -ராஜா ராணி 1956

24. ஆழி சூழ் உலகம் விடிந்த தென்று
    -ராஜா ராணி 1956

25. வாங்க...வாங்க...வாங்க
    எல்லோரும் இங்கே வாங்க
    -ராஜா ராணி 1956

26. கண்ணற்ற தகப்பனுக்குப் பெண்ணாகப் பிறந்தவளே
-ராஜா ராணி 1956

27. அலையிருக்குது கடலிலே அசைவிருக்குது உடலிலே
-குறவஞ்சி 1960

28. வெல்க நாடு வெல்க நாடு வெல்க வெல்கவே
-காஞ்சித் தலைவன் 1963

29. நீர்மேல் நடக்கலாம்...நெருப்பிலே படுக்கலாம்
-காஞ்சித் தலைவன் 1963

30. வாழ்க்கை எனும் ஓடம் வழங்குகின்ற பாடம்
-பூம்புகார் 1963

31. கன்னம் கன்னம் கன்னம்-சந்தனக்
கிண்ணம் கிண்ணம் கிண்ணம்
-பூமாலை 1965

32. ஒண்ணு கொடுத்தா ஒன்பது கிடைக்கும்
-மறக்க முடியுமா? 1966

33. காகித ஓடம் கடல் அலைமீது
-மறக்க முடியுமா? 1966

34. நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
-நெஞ்சுக்கு நீதி 1979

35. குடி உயரக் கோல் உயரும்
-தூக்குமேடை 1982

36. ஆயிரம் பிறைகள் காணும்வரை
-தூக்குமேடை 1982

37. குறிஞ்சி மலரொன்று குலுங்கி அழைக்குது
-தூக்குமேடை 1982

38. ஒரு பேரொளியின் பயணமிது

39. சுருளு மீசைக்காரனடி வேலுத்தம்பி
-வீரன் வேலுத்தம்பி 1988

40. ஆற அமரக் கொஞ்சம் யோசிச்சுப்பாரு
-மக்கள் ஆணையிட்டால் 1988

(கலைஞர் திரை இசைப் பாடல்கள்-
தொகுப்பு : சிலோன் விஜயேந்திரன்)

சிறந்த தமிழறிஞராக விளங்கிய தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் 30.10.1898இல் பிறந்திருக்கிறார். 'ஊழியன்' வார இதழின் ஆசிரியராகவும் விளங்கியிருக்கிறார். கலைஞரும் முரசொலி, முத்தாரம் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார்; சிறந்த தமிழறிஞராகவும் திகழ்கின்றார்.



**இயக்கத்தைக் கட்டிக் காப்பவர்**

ஓர் இயக்கத்தைத் திறம்படக் கட்டிக் காத்த, வழி நடத்திய ஆற்றல்மிகு தலைவராக விளங்கிய முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 30.10.1908இல் பிறந்தார். அறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை, அவருக்குப் பிறகு வழிநடத்திச் செல்லும் வரலாற்று நாயகராக கலைஞரும் விளங்குகிறார்.

## வள்ளுவர் கோட்டம்

குறள் முழுவதையும் பிறழாமல் சொல்லக் கூடிய ஆற்றல் பெற்று, அதனாலேயே 'திருக்குறள் பெருமாள்' என்று அழைக்கப்பட்ட பெருமாள் அவர்கள் 30.10.1914இல் பிறந்துள்ளார். கலைஞர் அவர்களின் 'குறளோவியமும்' அவர் கண்ட 'வள்ளுவர் கோட்டமும்' அவரது புகழை என்றென்றும் நிலைபெறச் செய்யக் கூடியவையாகும்.

திரைப்பட இயக்குநராக விளங்கிய வி. சீனிவாசன் என்பவர் 30.11.1929இல் பிறந்துள்ளார். கலைஞர் அவர்கள் திரைப்படத் துறையில்-திரைக்கதை அமைப்பில்-வசனம் எழுதுவதில் புதுமைகள் விளைவித்திருக்கிறார்.

## பல்வகைச் திறன்கள்

மிகச்சிறந்த சிந்தனையாளர் அவர். சொல்லாற்றல், எழுத்தாற்றல், வியக்கத்தக்க நினைவாற்றல், மதிநுட்பம் போன்றவற்றில் முழுப்பேராற்றல் வாய்ந்தவர் இந்நாளில் இவரைத் தவிர வேறு எங்கும் இல்லை.

இரவில் தூங்கப் போகும் வரை எழுதுகிறார். மிகச்சிறந்த இலக்கியவாதி. அரசியல்வாதியாக இருந்து கொண்டு இலக்கியவாதியாகவும் திகழ்கிறார்.

இங்கு புதுமையான வகையில் அழைப்பிதழ் அச்சிட்டுள்ளீர்கள். இது தடுக்கு அழைப்பிதழ் ஆகும். தடுக்கு போல அமைந்திருக்கிறது. இந்த அழைப்பிதழைப் பார்த்தால் கலைஞர் மிக மகிழ்ச்சி அடைவார்.

வள்ளுவர் கோட்டத்தை கலைஞர்தான் உருவாக்கினார். ஆனால் அதன் திறப்பு விழாவுக்கு முறையான அழைப்பில்லை அவருக்கு. மத்திய அரசாங்கத்தின் தொலைக்காட்சித்துறை என் வாழ்க்கை வரலாற்றைப் படமாகத் தயாரித்திருக்கிறது.

அதில் வள்ளுவர் கோட்டம் முன்நின்று பேசியுள்ளேன். அதில் கலைஞர் பற்றியும், வள்ளுவர் கோட்டம் பற்றியும் விளக்கி யுள்ளேன். இதை நீங்கள் தொலைக்காட்சியில் பார்க்கலாம்.

## நேர் வகிடு

கலைஞர் எதையும் புதுமையாகச் செய்யக் கூடியவர். தலைவகிடு பெண்களைப் போல நேர் வகிடு எடுத்திருப்பார். இவர் யாரைப் பார்த்துப் பின்பற்றினாரோ... தெரியாது! ஆனால் இவரைப் பார்த்தே இவரது நண்பர்களும் கலைஞர்களும் நேர்வகிடு எடுத்தார்கள். தமிழன்பன், ஏ.கே. வில்வம், அரங்கண்ணல் இன்னும் சிலர் அவரைப் பார்த்து நேர்வகிடு எடுத்தவர்கள். அவரையும் அவரது பேச்சையும் எழுத்தையும் பின்பற்ற, தொடக்க காலத்திலிருந்தே பலர் இருந்தனர்.

இன்றைக்குக் குடியரசுத் தலைவராக இருக்கின்ற ஆர். வெங்கட்ராமன், பட்டுக்கோட்டை குமாரவேல், ஓவியர் ரசாக், முன்னாள் அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம், புகழ் பெற்ற ஓட்டப் பந்தய வீரர் மயில் இராசகோபாலன் ஆகியோர் பயின்ற இராசா மடம் நடுநிலைப் பள்ளியில் நானும் பயின்றேன்.

இரண்டாம் உலகப் போர் தொடங்கிய அந்நேரத்தில் ஹிட்லரை உலகமே புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தது. அந்த ஹிட்லர் போல நானும் வலப்புறம் வகிடு எடுத்தவன். ஹிட்லரை நான் பின்பற்றினேன். என்னைப் பின்பற்றியவர்கள் யாரும் இல்லை. ஆனால் நேர்வகிடு எடுத்த கலைஞர் அவர்களைப் பின்பற்றியவர்கள் உள்ளனர்.

## காலைத் தொடும் கூந்தலும் கலைஞரின் மேல்துண்டும்

தோளில் துண்டு போடுவதில்கூடப் புதுமையைச் செய்தவர் கலைஞர் அவர்கள். அண்ணா, நாவலர், பேராசிரியர் போன்றவர்களிடமிருந்து மாறுபட்டு, மிக நீண்ட துண்டு

தரையைத் தொடுமாறு போடுவார். பெண்களின் கூந்தல்தான் பாதத்தைத் தொடும் என்பர். இவரணிந்த துண்டோ தோளிலிருந்து தரையைத் தொடுமாறு அமைந்து அதிலோர் கவர்ச்சியை உண்டாக்கும்.

## 1954-இல் ரூபாய் இருநூறு

1954 முதல் கலைஞரின் முரசொலி வார இதழில் நான் தொடர்ந்து கவிதை எழுதி வந்தபொழுது, அன்பளிப்பு ஏதாவது எனக்குத் தரவேண்டும் என்று நினைத்து, நேரில் கொடுத்தால் நான் ஏதாவது நினைத்துக் கொள்வேனோ என்று கருதி, எனது சட்டைப் பையில் நானறியாமல் ரூபாய் நூறோ, இருநூறோ வைத்துவிடுவார். 54-இன் அத்தொகை இந்த 88-இல் எத்தனை மதிப்புடையது என்பதை எண்ணிப் பாருங்கள்.

அண்ணா, பேராசிரியர், நாவலர் போன்றவர்கள் ஏடுகள் நடத்திய காலத்தில் கலைஞரும் 'முரசொலி' வார ஏட்டை நடத்தியவர். மற்றவர்கள் எல்லாரும் தங்கள் இதழ்களில் அச்சு எழுத்துக்களைக் கொண்டு கவிதைத் தலைப்புகளை வெளியிட்டபோது, இவரோ அச்சுரு செய்து கலைநயத்தோடு வெளியிடுவார்.

22.4.55 முரசொலி வார இதழில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு 'சிலை வைப்போம்' என்று முதன் முதலாகக் கவிதையில் எழுதியவன் நான், எனது அந்தக் கவிதைக்கு, பாவேந்தர் சிலை போன்று படம் வரைந்து படத்தோடு கவிதையை இடம்பெறச் செய்தவர் கலைஞர் ஆவார். பொருளாதார நெருக்கடியில் அவரிருந்த அந்த நாளிலேயே இத்தகைய கலையுணர்வோடு கவிதைகளை வெளியிடச் செலவு செய்யத் தயங்காதவர் அவர்.

### தொடர்ந்து நடத்தும் இதழாசிரியர்

இதழ் நடத்துவதிலும் எனது நண்பர் கலைஞர் அவர்கள் முதல்வராக விளங்குகிறார். 1925-இல் பெரியார் அவர்கள் 'குடியரசு' இதழ் தொடங்கினார். அந்த இதழ் தொடர்ந்து வராமல் இடையிலே நின்றது.



அண்ணா-திராவிடநாடு
நாவலர்-மன்றம்
தில்லைவில்லாளன்-தம்பி
அரங்கண்ணல்-அறப்போர்
காஞ்சி மணிமொழியார்-போர்வாள்
சி.பி. சிற்றரசு-தீப்பொறி
ஆசைத்தம்பி-தனி அரசு
கே.ஏ. மதியழகன்-தென்னகம்
நாஞ்சிலார்-விந்தியம்
என்.வி. நடராசன்-திராவிடன்
பி.எஸ். இளங்கோ-மாலை மணி

மேற்கூறப்பட்டவர்களால் நடத்தப்பட்ட இத்தகைய ஏடுகள் எல்லாம் தொடர்ந்து வந்ததாக வரலாறில்லை.

நானும் கூட உலகிலேயே இல்லாத அளிவிற்குக் கவிதை யிலேயே காவியம் என்ற ஏட்டைத் தொடங்கினேன். அதுவும் இடையிலேயே நின்றுபோனது. ஆனால், கலைஞர் அவர்களோ 'முரசொலி' ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி, வார இதழாக்கி-நாளேடாக்கி இன்றளவும் தொடர்ந்து நடத்தி வருகிறார். இந்த வகையில் இதழ் நடத்துவதில் இவர் வெற்றி பெற்றவராக விளங்குகிறார்.

### நெஞ்சுக்கு நீதி

வடநாட்டுத் தலைவர்களாகிய காந்தி, நேரு, ஜெயப்

பிரகாசர் போன்றோர் அவரவர் வாழ்க்கை வரலாற்றை அவரவர்களே எழுதியிருக்கிறார்கள். தென்னாட்டு அரசியல் தலைவர்களை எடுத்துக் கொண்டால், தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை-எனக்கும் பேராசிரியர் இலக்குவனார் அவர்களுக்கும் ஆசிரியராக இருந்த சாமி சிதம்பரனார் அவர்கள்தான் முதன் முதலில், ''தமிழர் தலைவர்'' என்ற தலைப்பிட்டு எழுதினாரே அன்றி, பெரியாரே எழுதவில்லை. அவ்வாறே அறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அ. மறைமலையானும், காமராசர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மு. நமச்சிவாயமும், பக்தவத்சலம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை காஞ்சி அமிழ்தனும் எழுதியிருக்கிறார்களே தவிர, அவர்களாக எழுதவில்லை. ஆனால், தன்னுடைய வரலாற்றை ''நெஞ்சுக்கு நீதி'' என்ற தலைப்பில் தானே எழுதியிருக்கக் கூடியவராக கலைஞர் தான் விளங்குகிறார். தன் வரலாற்றைத் தானே எழுதுகிற நிலை வடக்கே உள்ள அரசியல் தலைவர்களிடம் இருந்தது. தெற்கே, இவரே அத்தகைய நிலைக்கு எடுத்துக்காட்டாகிறார். அரசியல் தலைவர்கள் தன் வரலாற்றைத் தானே எழுத வேண்டும் என்ற தன்னம்பிக்கையை இவர் ஊட்டியிருக்கிறார்.

## நினைவாற்றல்

எனது நண்பர் கலைஞர் அவர்கள் 13.9.1944இல் சி.எஸ். ஜெயராமன் அவர்களின் தங்கை பத்மாவதியைத் திருமணம் செய்தபோது நானவர்க்கு வழங்கிய திருமண வாழ்த்தில், பாடல் பெற்ற தலமாகிய, அவர் பிறந்த திருக்குவளையைக் குறித்து,

''உருக்குலையா மங்கை ஒளிமுகத்தை முத்தமிடக்
கருக்கலிலே கண்விழிக்கும் திருக்குவளை''

என்று குறிப்பிட்டிருப்பதை மட்டும், அவரோடு நான் கலந்து கொள்ளுகிற கூட்டத்தில் கூறிவிட்டு, மேலுள்ள அடிகள் என் நினைவிற்கு வாராமையால் நிறுத்திவிடும்போது, அடுத்து பேசுகிற அவர், எஞ்சியுள்ள அடிகளைக் கூறி எதிரிலுள்ளவர்களின் பாராட்டுக்களைப் பெற்றுவிடுவார்.

ஆங்கில அறிஞர் மெக்காலே, தமிழறிஞர் ஆறுமுக நாவலர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார், அரசியல் துறையில் தந்தை பெரியார், காமராசர் போன்றோர் நினைவாற்றல் மிக்கவர்கள். இந்தப் பட்டியலில் எனது நண்பர் கலைஞரும் சேருகிறார் என்பதற்கு மேற்கூறிய கவிதையே சான்று.

**"பழைய நட்புக்கு போகிப் பண்டிகை இல்லை!"**

ஒருவர் அறிமுகப்படுத்தித் தெரிந்து கொள்வதை விட, அவராகவே பிறரை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய பேராற்றல் அவருக்குண்டு. திறமையை அவர் குறைத்து மதிப்பிடமாட்டார். அதே நேரத்தில் போற்றவும் தவற மாட்டார். அவரது "சங்கத்தமிழ்" நூலை வெளியிட்டவுடனே, ஒன்றில்.

"பழைய நட்புக்கு என்றும் போகிப் பண்டிகை இல்லை" என்றெழுதி, கையெழுத்திட்டு, துரைமுருகன் மூலமாக எனக்கு நேரில் கொடுத்தனுப்பினார். இன்றைக்கு அவரிருக்கும் நிலையில் என்னை நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதில்லை. திறமையுள்ளவன் நான் என்பதனால் என்னை நினைவில் வைத்திருக்கவும் மதிக்கவும் தவறவில்லை என் நண்பர் கலைஞர் என்பதற்கு இதுவே சான்று.

## சாதனைத் தமிழர்

மலேசியத் தலைநகர் கோலாம்பூரில் ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1987-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 15 முதல் 19 வரை சிறப்புற நடைபெற்றபோது, அம் மாநாட்டில் கலைஞர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிச் சிறப்பித்தார். இங்கே சாதனைத் தமிழராகத் திகழுகின்ற இவர், அங்கே, மலேசிய மந்திரி 'டத்தோ சாமிவேலு' அவர்களுக்குச் 'சாதனைத் தமிழர்' என்று பட்டம் கொடுத்தார். அந்த விழாவில் கலைஞரைப் பெருமைப் படுத்தினர். இது தமிழர்களுக்குக் கிடைத்த பெருமை யானாலும் இதை, கட்சி வேறுபாடு இல்லாமல் எண்ணிப் பார்த்துப் பூரிப்பு அடைய வேண்டும்.

## எழுத்துச் சூரியன்

உலகத்திலேயே மிக வேகமாகச் செயல்படுகிற மிச் சிலரில் ஒருவராக கலைஞர் விளங்குகிறார். வடநாட்டில் இருந்து ஏழு பேரை இங்கு இழுத்துவிட்டார். இது பெரிய செய்தியாகும். காமராசர் இங்கிருந்து வடநாட்டுக்குப் போனார். ஆனால் வடநாட்டுத் தலைவர்களை இவர் இழுத்து உள்ளார். இந்தியாவையே இழுக்கும் ஆற்றல் இருக்கிறது. மிக சாதுரியமான அறிவாளி இவர். இப்படி அவர் அனைத்துத் துறைகளிலும் சிறந்தவராக விளங்குகிறார்.

இப்படிப்பட்ட தலைவரின் வாழ்க்கை வரலாற்றை வட மொழியில் எழுத வேண்டும். வேறு மாநில மொழிகளில் எழுத வேண்டும். மேலும் அவரது வாழ்க்கை வரலாற்றைத் திரைப் படமாகத் தயாரிக்க வேண்டும். இதற்கான முயற்சியில் இங்குள்ளவர்கள் ஈடுபட வேண்டும்.

ஏற்றிய விளக்கு எண்ணெய் தீர்ந்ததும் அணைந்து விடும். உதய சூரியனுக்கு எண்ணெய் ஊற்றுவதால் ஒளியைத் தருவதில்லை. அது இயற்கையாகவே ஒளி தருகிறது. கலைஞர் அவர்களும் எண்ணெய் ஊற்றாமலே எரியும் எழுத்துச் சூரியனாக இயங்கிக் கொண்டிருக்கிறார்.

### எச்சங்களின் உச்சம்

எப்படிப் பார்த்தாலும் எவ்வளவு கழித்துப் பார்த்தாலும் மிச்சப்படுகிறார்.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்"

என்று வள்ளுவர் கூறுகிறார். அத்தகைய உயர்ந்த புகழை நிலைத்த புகழை இவர் பெற்றிருக்கிறார். இவரது எழுத்தாற்றல், பேச்சாற்றல், அணுகுமுறைகள், அரசியல் செயல்பாடுகள் போன்றவற்றைச் சிந்தித்துப் பார்க்கையில் எச்சங்களின் மிச்சமாக சிலர் இருப்பர். இவரோ எச்சங்களின் உச்சமாக இருக்கக் கூடியவர்.

இவர் என் நண்பர் என்பதிலும், நான் பிறந்த தஞ்சை மாவட்டத்தில் இவர் பிறந்தவர் என்பதிலும், பாடல் பெறாத தலமாகிய பழையனூரில் நான் பிறந்தேன். இவரோ, பாடல் பெற்ற தலமாகிய திருக்குவளையில் பிறந்தார் என்பதிலும், என்னைவிடப் பல படிகள் மேலோங்கி இருக்கிறார்.

இன்றைக்குத் தமிழகத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது. இவரை விட்டால் வேறு தலைவர் இல்லை என்று எல்லோருக்கும் தெரியும். இந்தத் தடவை நாம் விழிப்பாக இருக்க வேண்டும். வாய்ப்பை, விட்டுவிடக் கூடாது. இவரை வைத்துத் தான் தமிழ்நாட்டில் ஏதாவது செய்ய முடியும்.

கடிதம் எழுதும்போதும் கடவுள் துணை என்று எழுதுகிறார்கள் அல்லவா? அதுபோல இனிமேல் 'கருணாநிதி துணை' என்று எழுத வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு அண்ணா கலையரங்கத்தில் விழா எடுத்திருக்கிறீர்கள். வேலூர் கோட்டைக்குப் பக்கத்தில் விழா எடுத்துள்ளீர்கள். அவர் கோட்டைக்குச் செல்ல வழி செய்ய வேண்டும். அதற்காக நீங்கள் எல்லாம் அயராமல் உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். உதயசூரியன் உதிப்பதைத் தடுக்க யாராலும் முடியாது என்ற உறுதியோடு செயல்படுங்கள்-வெற்றி பெறுவது உறுதி என்று கூறி விடை பெறுகிறேன்.

*(வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் கலைஞர் பொன் விழாவில் 30.11.1988ல் உவமைக் கவிஞர் ஆற்றிய உரை)*



# கலைஞரின் ஆட்சி கவிதை போல் வாழ்க!

*அரசியல் நாடகத்தில்*
*அலிகூட வீர னாவான்*
*இருவரில் ஒருவர் வேண்டும்*
*எனும்நிலை வந்தால், "நானே*
*வரிசையில் முதல்வன், என்னை*
*மதியுங்கள்" என்ப தெல்லாம்*
*அரசியல் அறிவுப் பஞ்சம்*
*உடையவர் வார்த்தை யாகும்!*

*அங்கொரு காம ராசர்*
*அவரை நாம் அறிவோம். நாட்டில்*
*இங்கொரு கலைஞர் மு.க.*
*இவரையும் அறிவோம். ஒன்று*
*சிங்கமாம்! மற்றொன் றென்ன*
*தெரியுமா? புலியாம்! எங்கள்*
*தங்கமாம் கலைஞர் இன்று*
*தமிழ்நாட்டை ஆளு கின்றார்!*

*தலைவரின் தலைவர் அண்ணா*
*சாய்ந்தபின், இந்த நாட்டின்*
*நிலைஎன்ன? என்றி ருந்த*
*நேரத்தில் பதவி ஏற்று,*
*மலைஎன விளங்கு கின்றார்!*
*மதயானைத் தந்தம் போன்ற*
*கலைஞரின் ஆட்சி, என்றன்*
*கவிதைபோல் சிறந்து வாழ்க!*

(1.4.1969 'சுரதா' கவிதை இதழ்)

## உதயமே!

*அடக்கமாய் நாட்டை ஆண்ட*
*அண்ணாவின் நிழலே! வாங்கும்*
*வடக்கிலே தெற்கை வைத்து*
*வாதிடும் நீதியே! நம்மை*
*ஒதுக்கினார் தம்மைத் தேர்தல்*
*ஊஞ்சலி லிருந்து தள்ளிப்*
*படுக்கையில் படுக்க வைத்துப்*
*பார்த்திட்ட தலைவர் நீங்கள்!*

*தேரோடும் கோயில் சென்று*
*தேவாரம் பாடி டாத*
*ஆரூரர்; ஆளும் கட்சி*
*அரசியல் அப்பர்; தீமை*
*தாராத கூட்ட ணிக்குச்*
*சம்பந்தர்; எதிர்ப்பை எல்லாம்*
*கூரான மதிநுட்ப த்தால்*
*குடைசாய்க்கும் முதல்வர் நீங்கள்!*

*இப்போது முதல்வ ராக*
*இருக்கின்றீர் எனினும்; நீங்கள்*
*எப்போதும் கலைஞர்! ஈட்டி*
*எழுத்தாளர்! பெரும்பேச் சாளர்!*
*பொய்ப் போர்வைக் கதைக்குள் தூங்கும்*
*புராணத்தின் பகைவர்! நீங்கள்*
*முப்பாலின் முதற்பால்! கொத்து*
*முத்தமிழ் உமக்குத் தாய்ப்பால்!*

தடிகொண்டான் மயான மண்ணில்
தார்வேந்தன் ஒருவன்; சாட்டை
அடிகொண்டான் குடுமிக் கோயில்
ஆண்டவன் ஒருவன்; மாற்றார்
முடிகொண்டான் சோழன்; நாட்டின்
முதல்வரே! தாங்கள் கல்லக்
குடிக்கொண்டான் என்னும் பேரைக்
கொண்டிங்கே விளக்கு கின்றீர்!

சதித்தேர்தல் நடத்தும் கட்சித்
தலைமையை வீழ்த்தி வெல்லும்
பொதுத்தேர்தல் புலியே! ரோமா
புரிசென்ற முத்தே! செந்நெல்
விதைத்தேர்தல் தேவை; வேங்கை
விழியைப் போல் தெளிவு கொண்ட
மதுத்தேர்தல்வேண்டாம் என்று
மறுக்கின்ற தலைவர் நீங்கள்!

கற்றவர் மதிக்க, ஒலைக்
கவிஞர்கள் துதிக்க, நாட்டில்
மற்றவர் வியக்க, வேறு
மாநிலம்அழைக்க, உம்மைப்
பெற்றவர் உவக்க, உங்கள்
பெரும்பெயர் சிறக்க, மேலும்
உற்றவர் களிக்க வாழும்
உதயமே! வருக! வாழ்க!!

(1.3.1970 'சுரதா' கவிதை இதழ்)



# கவிஞரைப் பற்றி... கலைஞர்

"படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசையுண்டு தமிழ் வளர்த்த பாண்டியர்க்கு" என்று ஒருமுறை கூறி கவிதா மண்டலத்தின் பாராட்டுதலைப் பெற்ற, தோழர் சுரதா, பாரதிதாசனின் நேர் பரம்பரையைச் சேர்ந்தவர். அவரது மாணவருங்கூட! வளமான சொற்கள் சுரதாவின் கவிதை வரிகளில் பொங்கி வழிவதை நாம் காணமுடியும். பாரதியார் முதலிய தமிழ் ஏடுகளைப் பக்கத்திலே வைத்துக் கொண்டு பாட்டெழுதும் பழக்கமுடையவரல்ல. பல நாட்கள் காலத்திரையால் மறைக்கப்பட்டிருந்த அந்த நண்பரின் கவிதைகளை வாரந்தோறும் நீங்கள் சுவைக்கலாம். கவிதையழகைக் காணுங்கள். "விழி முடிக்கும் காதல் திருமணம்" என்று குறிப்பிடுகிறார் — ஆகா! புரோகிதரின் ஜாதகம் முடிவு செய்யும் திருமணமல்ல; தரகர்கள் பேசி முடிக்கும் திருமணமுமல்ல; பெற்றோரும் குறுக்கிட்டு முடிப்பதல்ல. விழிகளே முடித்து விடுகிறதாம். இதுபோன்ற பொருள் ததும்பும் நீண்ட வாக்கியங்கள் ஒரே வார்த்தையில் சொல்லும் முறை சுரதாவுக்குத் தனிப் பண்பு.

(ஆ-ர்) மு. கருணாநிதி
முரசொலி வார இதழ் 30—7—54

தொடர்பு முகவரி


உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை - சேலம் மாவட்டம்

அமைப்பாளர் : கவிஞர் எழுஞாயிறு
இணை அமைப்பாளர் : கவிஞர் அன்னையன்பன்
பேரவை ஓவியர் : கவிஞர் நாகா

முப்பாலிகைப் பதிப்பகம்,
10, காளியப்பா குடியிருப்பு.
பெரமனூர், சேலம்–636 007 தமிழ்நாடு.